## அலகு – 5

# இந்தியாவில் கல்வி வளர்ச்சி




### கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் நிகழ்வுகள் பற்றி அறிதல்:

- பழங்கால இந்தியாவில் வழங்கப்பட்ட முறையான கல்வி
- பாரம்பரிய மையங்களில் குருகுல முறையின் கீழ் கல்வி கற்றல்; அதேபோல மடங்களிலும் மடாலயங்களிலும் கல்வி கற்பித்தல்
- இஸ்லாமியக் கல்வி மையங்களில் கல்வி கற்பித்தல்
- பிரிட்டிஷ் இந்தியாவில் ஐரோப்பிய மறை ஊழியங்களும் மேற்கத்தியக் கல்வியின் மேம்பாடும்
- சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவில் கல்வி முன்னேற்றம்

UOLGC

## அறிமுகம்

கல்வி கற்றல் என்பது ஒருவரின் பிறப்பில் தொடங்கி அவரின் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு செயல்பாடாகும். பள்ளியில் வழங்கப்படும் முறையான கல்வியின் அடிப்படை நோக்கம் குழந்தைகளை அறிவுசார் திறன்களுடனும் உடல் திறத்தினுடனும் வளர்க்க உதவுவதே ஆகும். பள்ளிப்படிப்புக்குப் பிறகு கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ சேரும் மாணவர்கள் தங்களின் எதிர்கால வாழ்விற்குத் தேவையான திறன்களை அங்கே பெறுகின்றார்கள். உயர்கல்வி நிறுவனத்திலிருந்து பட்டம் பெற்ற ஒருவர் தான் தேர்ந்தெடுத்துப் படித்தப் பாடத்தில் முழுமையான அறிவைப் பெற்றிருப்பார் எனவும் அவர் அறிவியல் மற்றும் வரலாற்றுக் கண்ணோட்டம் கொண்டிருப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. காலப்போக்கில் இந்தியாவில் கல்விமுறை எத்தகையப் பரிணாம வளர்ச்சியுடன் உருப்பெற்றது என்பதை இந்த அத்தியாயத்தில் காணலாம்.

LVR6G

## பழங்கால இந்தியாவில் கல்வி

பழங்கால இந்தியாவில், அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகள்கள், மகன்களுக்கு மட்டுமே கல்வி வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு ஆசிரமங்கள், துறவிகளின் வாழிடங்களில் வேதபாடல்கள் மனப்பாடம் செய்வதற்குக் கற்பிக்கப்பட்டது. மேலும் அவர்கள் சமஸ்கிருத இலக்கணம், உரைநடை மற்றும் செய்யுள் புனைதல், தர்க்க சாஸ்திரம் மற்றும் பௌதிக மெய்யியல் போன்ற பாடங்களையும் கற்றனர். அவர்களின் பாடத்திட்டத்தில் வானியல், கணிதம், மருத்துவம், ஜோதிடம் ஆகியவையும் இடம்பெற்றன. இத்தகையக் கற்றல் – கற்பித்தல் வழக்கே குருகுல அமைப்பு எனப்பட்டது.



5_History_Unit-5_TM.indd 53
03/04/2023 13:27:05